பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 6 ரபி அவ்! 9 இதழ் 8
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18-2-78

சன்சயின் சோப்
யாழ்ப்பாண பஜார்
கடைகளில் பெற்றுக்
கொள்ளலாம்,
இது ஒரு லாலா
தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

கனகர் கொலை முயற்சி:

## அரசியல் புள்ளிகள் அடுத்தவாரம் கைதாகலாம்?

[கொழும்பு]

பொத்துவில் எம்.பி. திரு.எம். கனகரத்தினம் துப்பாக்கிசூடு தொடர்பாக சில அரசியல்புள்ளிகள் உட்பட சிலர் அடுத்தவாரமளவில் கைதுசெய்யப்படவிருப்பதாக பொலிஸ்வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

திரு. கனகரத்தினத்தின் உடல் நிலை முன்னேற்றமடைந்துவருகிறது. [ம]

சன்சோனி கமிஷன் விசாரணை:

# 'யாழ்ப்பாண நகரமே இல்லாமல் போய்விட்டது'

## கலவரம் பற்றி கேட்டதற்கு அனு பொலிஸ் அதிபர் இப்படி கூறினர்

### உதவி தொழில் கமிஷனர் சாட்சியம்

— கா. யோகநாதன் —
(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பிய அனுராதபுரம் பொலிஸ் அதிபர் திரு. லீயனகேயிடம் யாழ்ப்பாணத்தில் என்ன கலவரம் என்று கேட்டபோது அவர் யாழ்ப்பாண நகரமே இல்லாமல் போய்விட்டது என்று கூறினர்.**

இவ்வாறு உதவி தொழில் கமிஷனர் திரு அம்பலம் மகாசிவம் நேற்று சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

உதவி தொழில் கமிஷனர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

77-ம் ஆண்டு ஆகஸ்ட் கலவரத்தின்போது நான் அனுராதபுரத்தில் கடமையாற்றினேன். தற்போது கல்முனையில் கடமையாற்றுகிறேன்.

ஆகஸ்ட் 17-ந் திகதி நான் கந்தோரில் இருந்தபோது என் நண்பர் ஒருவர் போன் பண்ணி அனுராதபுரம் மார்க்கட்டை குண்டர்கள் தாக்கி கொள்ளையடிப்பதாகக் கூறினர்.

நான் 10-30 மணிக்கு அனுராதபுரம் மணிக்கூட்டடிக்குச் சென்று அங்கு நடப்பதைப் பார்த்தேன்.

குண்டர்கள் கடைகளை உடைத்துக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். இவ்வுடையில் நின்ற சில பொலிசாரும் அதில் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர். யூனிபோமில் நின்ற பொலிசார் ஒருவர் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நான் பின் கந்தோருக்குத் திரும்பிவிட்டேன். அன்று பின்னேரம் ஒரு கூட்டத்தினர் வீட்டை உடைத்தனர். நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது. நான் ஜீப்பில் மகனுடனும் நண்பர்களுடனும் சென்றுவிட்டேன். காரை நான் கொண்டுசெல்லவில்லை.

18ம் திகதி அனுராதபுரம் பொலிஸ் அதிபர் திரு. லியனகே வந்தார். அவரை போனில் தொடர்பு கொள்ள முயன்றதாகவும், முடியவில்லை என்றும் சொன்னேன். அவர் யாழ்ப்பாணம் சென்றிருந்தார் என அறிந்தேன்.

## "இளைஞர்கள் திரண்டு பொலிசாரை முற்றுகை"

அவரிடம் யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தது என்று கேட்டேன்.

பொலிசாரை ஒரு இளைஞர் சுட்டுவிட்டதாகவும் அந்த இளைஞரைக் கைது செய்ததும் அவரை விடுவிக்குமாறு கோரி இளைஞர்கள் திரண்டு தங்களை முற்றுகையிட்டதாகவும் பொலிஸ் அதிபர் லியனகே கூறினர்,

காயமடைந்த பொலிசாரை யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதித்தபோது அங்கு சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டதால் அவரை அனுராதபுர ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்துள்ளதாகவும் பொலிஸ்

(6-ம் பக்கம் பார்க்க]

## ஒரு பெண்ணின் கண்ணீர்க் கதை'

[யாழ்ப்பாணம்[

நேற்று நடைபெற்ற சன்சோனி கமிஷன் முன் திருமதி இந்திராணி சிவசம்பு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

தற்சமயம் நான் கந்தர்மடத்தில் இருக்கிறேன் எனக்கு 3 பிள்ளைகள் உண்டு. மூவரும் 14 வயதிற்கு உட்பட்டவர்கள், இருவர் பெண்கள்.

எனது கணவர் ஆகஸ்ட் கலவரத்தின்போது, அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் இரசாயனகூட உதவியாளராகக் கடமையாற்றினர். அவர் அங்கு கலவரத்தில் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டார். இத்தகவல் எனக்கு அறிவிக்கப்பட்டது.

என் கணவரை கொலை செய்த சம்பவத்தை நேரில் கண்டவர்கள் சாட்சி சொல்லத்தயாராக இருக்கிறார்கள் கண்ணால் சம்பவத்தைக் கண்டவர் பாலரத்தினம் என்பவராகும். அவர் அனுராதபுரம் சுகாதார அத்தியட்சகர் கந்தோரில் கடமையாற்றியவர்.

### 3000 மட்டுமே நஷ்டஈடு

எனக்கு சமூகசேவைப் பகுதி 3000 ரூபா மட்டுமே நஷ்டஈடாகத் தந்தது. வேறு எதுவும் கிடைக்கவில்லை அவரது சடலத்தை கொண்டு வந்து, இங்கு இறுதிச்சடங்குகள் செய்ய 4000 ரூபா செலவானது இப் பணத்தை கடன் பெற்றேன்.

[6-ம் பக்கம் பார்க்க]

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி
மாணவ மாணவிகளால்
மஹாகவியின்
புதியதொரு வீடு
என்னும் நாடகம்
20-2-78 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்
பிரவேசம் ரூபா 10/- ரூபா 5/-
8544 அதிபர்

## பூட்டிய மண்டபத்துள் சுங்க அதிகாரி இரகசியசாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சான்சோனி விசாரணைக் கமிஷன் முன் நேற்று சுங்கப்பகுதி உதவி கலக்டர் திரு. எஸ். எம். ஜே. செனரத்ன இரகசியமாக சுமார் ஒருமணிநேரம் சாட்சியமளித்தார். அவர் இன்று காலையும் தொடர்ந்து சாட்சியமளிப்பார்

திரு. செனரத்ன சாட்சியமளிக்கையில், பத்திரிகைநிருபர்கள், படப்பிடிப்பாளர் உட்பட சகல பார்வையாளர்களும்பொலிசாரால்வெளியேற்றப்பட்டனர்.

மண்டபவாசல் கதவு பூட்டப்பட்டு அதற்குள் விசாரணை நடைபெற்றது.

சட்டத்தரணிகளும் இவ்விசாரணை தொடர்பானவர்களும் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை,

நேற்றுக்காலை நடந்த விசாரணையின்போது, மாணவர்களும் வந்திருந்தனர். யாழ்ப்பாணம் எம். பி. திரு. யோகேஸ்வரனும் வந்திருந்தார். நேற்றுக்காலை, தமிழ் தொழிற்சங்க கூட்டணிசார்பில் சிலர் சாட்சியமளித்தனர்.

### புதிய சாட்சிகள் ஏற்பாடு

புனர்வாழ்வு கழக தலைவர் திரு. கே சி நித்தியானந்தா புதியசாட்சிகளுக்கான ஒழுங்குகளை செய்துவருகின்றார்.

தமிழ் தொழிற்சங்க கூட்டணியினரும் புதிய சாட்சிகளை ஏற்பாடுசெய்துவருகின்றனர் இதேசமயம், சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியமும், இந்து இளைஞர்பேரவை சார்பிலும் அரசாங்க ஊழியர் சார்பிலும் சில சாட்சிகளை ஒழுங்குசெய்து வருகின்றார். (ச இ)

## சிவாஜிகணேசன் இன்று வருகிறார்

[கொழும்பு]

'நடிகர்திலகம்' சிவாஜிகணேசன் இன்று இலங்கை வருகிறார்.

இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பான 'பைலட் பிரேம்நாத்' படப்பிடிப்புக்காகவே திரு. சிவாஜி இன்று வருகிறார். இப்படத்தின் இயக்குனரான திரு எஸ் திருலோகசந்தரும் மற்றும் பலரும் நேற்று இலங்கை வந்து சேர்ந்தார்கள் (ம இ)

## திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

அனலைதீவு சதாசிவ ஆங்கில பாடசாலை புதிய கட்டிடத்தை தீவுப்பகுதி எம். பி திரு.கா பொ. இரத்தினம் இன்று திறந்து வைப்பார். ]ம[

## 27-ம் திகதி மீண்டும் விசாரணை

[யாழ்ப்பாணம்],

இன்று 10வது தினமாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சன்சோனிக்கமிஷன் விசாரணை இன்றுடன் முடிவடைந்துமீண்டும் இம்மாதம் 27ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். (இ)

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: 12522 | பிரிவிடல்

இராமநாதர் சுப்பிரமணியம் இராம்நாதன், தும்பளை. பருத்தித்துறை. வழக்காளி

எதிர்

1. சந்திரசேகரர் சிவதாசன்,
2. பெண் சந்திரதிலகம் இருவரும் 126, கண்டி ரோட், குருநாகல்.
3. பரமநாதர் நவரட்ணராசா Q.C., அலெச்சாண்டர்ரோட் வெள்ளவத்தை.
4. பெண் சந்திரநாயகி, அலெக்சாண்டர்ரோட், வெள்ளவத்தை.
5. சபாபதி சந்திரசேகரம்,
6. கலாநிதி C. கிருஷ்ணபிள்ளை மண்டலேசன்.
7. V. கனகறட்னம் சுப்பிரமணியம்,
8. பெண் மணிமேகலை,
9. கைலாசபிள்ளை மறுநாமம் செல்லையாபிள்ளை சண்முகநாதன்.
10. சண்முகநாதன் பெண் கண்ணகை,
11. செல்லத்துரை ஜெயறட்னம்,
12. பெண் பொன்னம்மா,
13. கிருஷ்ணபிள்ளை மகள் அமிர்தவல்லி,
14. பொன்னையா சிவராசா,
15. பொன்னையா சுப்பிரமணியம்,
16. கந்தையா தியாகராசா,
17. கந்தையா சிவததாசா, மறுநாமம் சிவராசா.
18. செல்லத்துரை தர்மறட்னம்,
19. பெண் தங்கம்மா எல்லோரும் புலோலி மேற்கு, புலோலி,
20. M. சின்னத்தம்பி வேலாயுதபிள்ளை, புலோலி மேற்கு தற்காலம். 16, பிரதானவீதி, செங்கல்லடி, மட்டக்களப்பு.
21. பெண் சிவக்கொழுந்து, புலோலி மேற்கு,
22. சிவப்பிரகாசம் மகள் அமிர்தவல்லி,
23. சிவப்பிரகாசம் மகள் சுந்தரவல்லி,
24. சிவப்பிரகாசம் மகள் இன்பவல்லி,
25. சிவப்பிரகாசம் இராதா கிருஷ்ணன்.
26. செல்லத்தம்பி இராமச்சந்திரன் (இறந்தவர்) எல்லோரும் புலோலி மேற்கு,

26 A. இராமச்சந்திரன் கைம்பெண் ஞானசகுந்தலை, 344/1. பேராதனை ரோட், கண்டி.

27. A சங்கரப்பிள்ளை கைம்பெண் அன்னம்மா, மறுநாமம் சிதேவன்.
28. செல்லத்தம்பி முத்துக்கிருஷ்ண,
29. செல்லத்தம்பி அருச்சுண,
30. கந்தையா சிவதாசா மறுநாமம் சிவராசா பெண் தங்கம்மா எல்லோரும் புலோலி மேற்கு பருத்தித்துறை.

எதிராளிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் (பிரிவிடல்) அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978ம் ஆண்டு சித்திரை மாதம் 10-ந் திகதி (10-4-1978) திங்கட்ளழமை காலை பத்துமணிக்கு குறித்த காணிக்குள் நின்று என்னால் கோட்டால் நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூபா 9,905/-க்கு பங்காளருக்குள் ஏலத்தில் விற்கப்படும்.

பங்காளர்கள் இவ் ஆதனத்தை வாங்காதுவிடின், பின்னர் என்னால் பிரசித்த ஏலத்தில் அன்று விற்கப்படும். பிரசித்த ஏலத்தில் பங்காளரும் வாங்குவதற்கு அனுமதிக்கப் படுவர்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று தும்பளை இறை மட்டிக் குமாரர் வளைக்கடையகாடு நிர. 3 குளி 8 7/16ம், மட்டிக் குமாரர் வளைக்கடையகாடு நிர. 4 குளி 5 13/32ம், சேர்ந்து ஒரே காணியாய் உள்ளது. இது 1974 ம் ஆண்டு வைகாசி மாதம் 21ம் திகதி 1059ம் இலக்கத்தில் நில அளவையாளர் C. C. குமாரசாமியால் தயாரிக்கப்பட்ட படத்தில் காண்பிக்கப்பட்டு இருப்பது. இப்படத்தின்படி நிர. 9, குளி 8.07 கொண்டது. எல்லை கிழக்கு சீனியனின் உரிமைக்காரனுக்குரிய ஆதனமும், வடக்கு இளையவன் சேகரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், இளையவன் கந்தையனுக்குரிய ஆதனமும், மேற்கு வல்லி தங்கராசாவுக்குரிய ஆதனம், தெற்கு சின்னக்குட்டி முத்தையாவுக்கும் பெண் வள்ளியம்மைக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைக்கு உட்பட்ட யாவும்,

தி. வேலுப்பிள்ளை ஜே. பி.

[ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர், விலைமதிப்பாளர்]

"கெச்சர் வாசம்"
வல்வெட்டித்துறை, 10-2-1978 8530

LISTER ENGINE HR3 MGR 2

வள்ளங்களுக்குப் பொருத்தப்படும்
லிஸ்டர் என்ஜின்களுக்கு
உடனே பதிவு செய்து கொள்ளவும். இன்னும் சில யந்திரங்கள் மட்டும் கைவசம் உண்டு.

ராதாமெஷின்கொம்பனி
95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
8539

### ஏல விற்பனை

பாற்பண்ணைத் திட்டம் நல்லூர்

மேற்படி பாற்பண்ணையில் உள்ள 4 நாம்பன் கன்றுகளும் பழைய பாற்பாத்திரங்களும் 22-02-1978 அன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சங்கக்காரியாலய வளவில் பகிரங்க ஏலவிற்பனையில் விடப்படும்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

நல்லூர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
62, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 8542

ஊர்காவற்றுறைத் தொகுதியில்

## ஐ. தே. க. அமைப்பாளரால் ஆசிரியர் இடமாற்றம்

### அமைச்சருக்கு பண்டிதர் தந்தி

(யாழ்ப்பாணம்)

ஐ. தே. க அமைப்பாளர் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவர் தமக்கும் செல்வாக்கு இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக ஊர்காவற்றுறை தொகுதியில் பல ஆசிரியர்களை திடீர் இடமாற்றம் செய்துள்ளார். இந்த நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவு கட்டுவதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கல்விஅமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது:

"ஐ. தே. க. அமைப்பாளர் என்று கூறிக்கொள்ளும் ஒருவரின் முயற்சியினால் ஊர்காவற்றுறையில் உள்ள பல ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

நெடுந்தீவு மகாவித்தியாலய பதில் அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி மன்னார் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டார்.

புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலய ஆசிரியர் திரு. நடராஜா மாத்தளைக்கு மாற்றப்பட்டார்.

நாரந்தனை கணேசவித்தியாசாலை ஆசிரியர் திரு. வை. தியாகராஜா வவுனியாவுக்கு மாற்றப்பட்டார்.

எனினும் இந்த இடமாற்றங்கள் எனது தலையீட்டினால் நிறுத்தப்பட்டன.

அதற்குப் பின்னரும்கூட அண்மையில் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய ஆசிரியர் திரு. என். தர்மலிங்கம் கலகாவுக்கு உடனடியாக மாற்றம் செய்யப்பட்டார்.

தயவு செய்து ஆசிரியர்களை சதுரங்க விளையாட்டில் காய்களாகப் பயன்படுத்துவதை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்." [இ]

## 'மக்கள் நிம்மதியுடன்வாழ குற்றங்கள்குறையவேண்டும்'

### யாழ். எஸ். பி. வலியுறுத்து

[யாழ்ப்பாணம்]

"சமுதாயத்தில் குற்றச் செயல்கள் அருகினாலே மக்கள் நிம்மதியுடன் வாழமுடியும். இந்தவகையில்பொலிசார்தமது கடமையைச் செய்வதற்குப் பொதுமக்கள் தமது முழு ஒத்துழைப்பினையும் அளிக்கவேண்டும்"

இவ்வாறு யாழ். பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. டக்ளஸ் றன்முத்துகல தெல்லிப்பளை அண்ணமார் ஆலயத்திற்கு அருகில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. வேலாயுதம்தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. ரி. தாமோதரம்பிள்ளை பேசுகையில் "பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் இடைவெளி இருக்கக்கூடாது. பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி பொலிசார் தம் கடமைகளைச் செவ்வனே செய்ய இயலாது" என்றார்.

ஏ. ஜி. ஏ. உரை

வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். குமாரசாமி பேசுகையில் "சமுதாயம் மேம்பட வேண்டுமாயின் மக்களிடம் நற்பண்புவளர வேண்டும் ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் உயர் குணங்களில்தான் தங்கியுள்ளது. நல்லொழுக்கமும்கட்டுப்பாடும் ஒளிமிகுந்த வாழ்வைத் தரும்" என்று வலியுறுத்தினார்.

தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திரு. திரு. எஸ். தங்கவடிவேல்பேசுகையில் "கிராமங்களில் சட்டவிரோதமாக வீடுகளில் கள்விற்பனை செய்வது தடுக்கப்பட வேண்டும். கூட்டுறவுத் தவறணைமுறை பல சீவல் தொழிலாளரின் ஏற்றம் மிக்க வாழ்வுக்கு வழிவகுத்துள்ளது" என்றார். [உ]

### நிதிசேகரிப்பு இயக்கம்

[கொழும்பு]

ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி), நிதி சேகரிப்பு இயக்கமொன்றை இம்மாதக் கடைசிவாரத்தில் நடத்த திட்டமிட்டுள்ளது.

இம்மாதம் 20 ம் திகதி முதல் 27 ம் திகதிவரையிலான ஒரு வார காலத்துக்கு நடைபெறவிருக்கும் இந்த இயக்கத்துக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று ம. வி. முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது:

முன்னணியின் சார்பில் திரு. லயனல் போபகே விடுத்துள்ள அறிக்கையொன்றில்;

"நிதி சேகரிப்பு இயக்கத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தவும் எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. முதலாளித்துவ சமூக அமைப்பு முறையை ஒழித்து நமது நாட்டில் ஒரு உண்மையான மக்கள் நலன் பேணும் சோஷலிஸ சமூகத் திட்டமொன்றை வெற்றிகரமாக அமைக்க விரும்பும் எல்லா மக்களும் எமது கட்சியின் வளர்ச்சிக்கு உதவவேண்டும்" என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்

166/1, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்
நடைபெறுகின்றன

G. C. E. O/L முழுநேர வகுப்புகள் (காலை, மாலை)
G. C. E. A/L மீட்டல் வகுப்புகள்
(1978 ஏப்ரல் பரீட்சை)
G. A. Q, I. A. A. வகுப்புகள்
(சனி, ஞாயிறு மட்டும்)
SPOKEN ENGLISH (மாலை நேர வகுப்புகள்)

G.C.E. A|L 1979 ஏப்ரல்
பரீட்சை ஆரம்பம் (1-3-77)
8523

## வரி விளம்பரம்

### தேவை

மரவிளையாட்டுப் பொருட்கள் உற்பத்திசெய்யும்தொழிற்சாலைக்கு மெசினில் வேலைசெய்யும் அனுபவமுள்ள வேலையாட்கள் நாட்சாட்சிப் பத்திரத்திரத்துடன் நேரடித் தொடர்பு கொள்க. மனேஜர் யாழ். டொயிஸ், 246, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 8531

லேத்மன் பிற்றரும், அப்பிறன்ரிசும் (Latheman Fitter & An Aprentice) தேவை. விண்ணப்பிக்கவும். யந்திரம்ஸ், 336, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 8527

சீமேந்து வெற்று (B) பாக்குகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 8522

தேவன்ஸ் சியாக்காய்பவுடர் மற்றும் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவன்மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8513

வார்ப்பு வேலையில் அனுபவமுள்ளோரும், ஒரு வரச்சனும் உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு:- HANSCO, 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 8545

தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்-தட்டெழுத்தாளர், எழுதுவினைஞர் மூன்று பணிகளையும் செய்யக்கூடிய ஒருவர் பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8537, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8537

### விற்பனைக்கு

காணி, அரியாலை, நாவலடி பஸ் ரோட்டிற்கு அருகாமையில், குடியிருக்க வசதியான 15 பரப்பு தென்னம் காணி, உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். க. கனகசபை, 30/30, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை. 8543

### வெற்றுச் சாக்கு கேள்விவிளம்பரம்

கட்டைவேலி, நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 16000 க்கும் மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திர படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 25-2-78 ந் திகதி காலை 10-00 மணிக்கு முன்னராக பதிவுத் தபால் மூலம் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடல்வேண்டும்.

பொது முகாமையாளர்
கரவெட்டி,
15-2-78.
8541

PERCIVAL HALL
Chapel Street,
Jaffna.
CHARTERED
PRELIMINARY
Bilingual (English & Tamil)
Application close 22-2-78
Enrolment 27-2-78
8528

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஈழநாடு
The Eelanaadu

## நெல்விளைச்சல்

இம்முறை பெரும்போக விளைச்சலில் ஐந்து கோடி எண்பது லட்சம் புசல் கிடைக்குமென்று கணக்கிடப்பட்டிருந்தாலும் ஏழு கோடி புசலுக்கு மேல் விளையும் என எதிர்பார்ப்பதாக காணி விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

திருமலை, பொலநறுவை, அநுராதபுரம் மாவட்டங்களில் சுற்றுப்பயணம்செய்த பின் காணி விவசாய அமைச்சர் இப்படி நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

விளைச்சல் அனைத்தையும் அரசு வாங்க முன்வந்துள்ளதென்றும் விவசாயிகள் தமது விளைச்சலை அரசாங்கத்துக்கே அளிக்க வேண்டுமென்றும் அமைச்சர் கோரியிருக்கிறார்.

இம்முறை அமோகவிளைச்சல் ஏற்பட்டிருப்பதை அறிந்து விவசாயிகள் மட்டுமல்ல நாட்டு மக்கள் அனைவருமே மகிழ்ச்சியடைவர்.

விவசாயிகளின் விளைச்சல் அனைத்தையும் அரசு வாங்குவதற்கு முன்வந்திருப்பதும் நல்லதுதான்.

நெல் மட்டுமல்ல விளைபொருள்கள் அனைத்தையும் விவசாயிகள் அரசுக்குக் கொடுக்க மறுக்கமாட்டார்கள். ஆனால் அரசுக்கு இவற்றை விற்பதிலுள்ள நடைமுறைகளும் சிலபகுதிகளில் இடம்பெற்ற ஊழல்களும் விவசாயிகளுக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதுண்டு.

தனியார்துறையினர் வயல்வெளிக்கே வாகனங்களுடன் சென்று விலையைப் பேசி அந்த இடத்திலேயே பணத்தைக் கொடுத்து நெல்லை ஏற்றிக் கொண்டு சென்றுவிடுகிறார்கள்.

உடனேயே பிரச்சினை தீர்ந்துவிடுகிறது. விவசாயிக்கும் சிரமமில்லை அரசாங்கமும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு இது போன்ற சுலபமான நடைமுறையைப் பின்பற்றினால் விவசாயிகள் தங்கள் விளைபொருள்கள் அனைத்தையும் அரசுக்குக் கொடுக்கத் தயங்கமாட்டார்களென்று நம்பலாம்.

நெல்லையோ அரிசியையோ சேமித்து வைப்பதற்கு நமது நாட்டில் போதிய வசதி இல்லை. இதுபற்றியும் குறிப்பிட்ட காணி விவசாய அமைச்சர் இதற்காக விசேஷ நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசிகூடக் களஞ்சியத்தில் கிடந்து உக்கிப் பாவனைக்கு உதவாமல் போனது நாடறிந்த விஷயம்.

எனவே உள்நாட்டில் கொள்வனவு செய்யும் நெல்லையும் இறக்குமதி செய்யப்படும் அரிசியையும் பழுதாகாமல் சேமித்து வைப்பதற்கு வழிவகை காணப்பட வேண்டும்

வெளிநாடுகள் பலவற்றிலும் உணவு தானியத்தைச் சேமித்து வைப்பதற்கு சிக்கனமான நவீன முறைகளைக் கையாளுகிறார்கள். இவைபற்றியும் காணிவிவசாய அமைச்சு ஆராய்ந்தால் பயனுள்ளதாக இருக்கும்.

### மணிவாக்கு

அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றான்.

—இயேசுகிறிஸ்து

---

சன்சோனி கமிஷன்முன் வெளியான தகவல்கள்

# 'நகைகளை பொலிசார் கொள்ளையடித்து கடைக்கும் தீ வைத்தனர்

[யாழ்ப்பாணம்]

''பொலிசார் கன்னாதிட்டியிலுள்ள நகைக்கடையில் சுமார் 55,000 ரூபா பெறுமதியான நகைகளையும், ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்ததுடன், கடை யையும் தீவைத்து சேப்படுத்தி 50,000 ரூபா நஷ்டம் ஏற்படுத்தினார்கள்''

சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளித்த கன்னாதிட்டி கிருஷ்ணா நகைமாளிகை உரிமையாளர் சபாபதி வரதராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு சபாபதி, தொடர்ந்து கூறியதாவது!

''நான் ஆரம்பத்தில் சிறிய கடையை ஸ்தாபித்தேன். பின் என் முயற்சியால் உழைத்து பெரிதாக்கினேன். அதனால் வருமானவரி கட்டக்கூடிய நிலை வந்தது.

''ஆகஸ்ட் 15ம் தேதி யாழ்ப்பாணத்தில் கலவரம் ஆரம்பமானது. 17ந் தேதி, என்கடை பொலிசாரால் கொள்ளையடிக்கப்பட்டது. என் வீடு கடையிலிருந்து 100 யார் தூரத்தில் உள்ளது.

''பொலிசார், கடைசாமான்களுக்கும் தீயிட்டு கொளுத்தினார்கள். நகைகளை கொள்ளையடித்தனர். கட்டிடத்திற்கு 50,000 ரூபா சேதமேற்பட்டது. 25,000 ரூபா பணமும், 25,000 ரூபா நகையும், 5000 ரூபா பெறுமதியான ஏனையசாமான்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

''கமிஷனர் ஐயா என து கடையை நேரில்வந்துபார்வையிட்டார்''. [க]

## "என்னைத் தாக்கி குளத்தில் வீசினர்"

(யாழ்ப்பாணம்)

சயிக்கிலில் வந்த என்னை பொலிஸார் மறித்து அடித்து குளத்தில் அமிழ்த்தினார்கள். என் சயிக்கிளை பின்னர் உடைந்தநிலையில் குளத்திலிருந்து மீட்டோம்.

சன்சோனிகமிஷன் முன் நேற்று சாட்சியமளித்த கொட்டடியைச் சேர்ந்த சின்னத்துரை துரைராஜசிங்கம மேற்கண்டவாறு கூறினார்.

துரைராஜசிங்கம் மேலும் கூறியதாவது எங்கள் வீட்டில் சகோதரி காலையில் இடியப்பம் அவித்து கடைகளுக்கு கொடுப்பது வழக்கம். அன்று சகோதரிக்கு சுகமில்லாததினால் இடியப்பம் அவிக்கவில்லை. ஆதலால் கடைக்காரர்களுக்குப் போய் சொல்லும்படி கூறினார்.

15-ம் தேதி நான்சயிக்கிளில் காலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றேன். றீகல் தியேட்டர் சந்திக்குப்போக சிவில் உடையில் பொலிஸார் நின்றனர். 2 பேர் என்னைமறித்தார்கள். பட்டனால் அடித்தார்கள் நான் விழுந்துவிட்டேன். நான் சயிக்கிளை போட்டுவிட்டு பஸ் நிலையம் நோக்கி ஓடப்பார்த்தேன். குளத்திற்குள் குதிக்கமுன் என்தலையில் அடித்தார்கள். தையல் தலையில் போடப்பட்டது. பின்வீட்டைபோய் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு சென்றேன் புல்லுக்குளத்திலிருந்து என்சயிக்கிளை எடுத்தோம் சயிக்கிள் உடைந்திருந்தது

எவ்விதமாகவும் நான் நடந்து கொள்ளாமலிருக்க, என்னை பொலிஸார் ஒருவித காரணமுமின்றி சும்மா அடித்தார்கள். அன்று காலை 6 மணிக்கு இன்ஸ்பெக்டர் சேனாதிராசா என் வாக்குமூலத்தை ஆஸ்பத்திரியில் பதிவு செய்தார். (க)

## ''நாகவிகாரைச் சந்தியில் நடந்தவற்றை வீட்டில் இருந்து பார்த்தேன்''

[யாழ்ப்பாணம்]

நாகவிகாரைச் சந்தியில், வாகனங்களில் சென்றவர்களையும், சயிக்கிள்களில்சென்றவர்களையும், நடந்து சென்றவர்களையும், தாக்கியவர்கள் பொலிஸ் உடையில் இருக்கவில்லை. சிவில் உடையில் நின்றார்கள். அவர்கள் இராணுவத்தினராகவும் இருக்கலாம்.

எட்மன் சமரக்கொடி தலைமையிலான புரட்சிவாத சமசமாஜக்கட்சி யாழ்ப்பாண உறுப்பினரான ஆரியகுளத்தைச் சேர்ந்த வல்லி முருகேசு பொன்னையா, சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பொன்னையா மேலும் கூறியதாவது: நான் நாகவிகாரைக்குப் பக்கத்தில் இருக்கிறேன். நான் ஒரு அரசியல்வாதி. புரட்சிவாத சமசமாஜக் கட்சி உறுப்பினர். நான் ஒரு இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்தவன்.

ஆகஸ்ட்16ம்தேதிஎனதுவீட்டிலிருந்து, ஆரியகுளம் சந்தியில் நடந்தவற்றைப் பார்த்தேன் பொலிசார் அங்கு நின்றார்கள். சிலசமயம், இராணுவ பட்டாளங்கள் நின்றார்கள். நான் மட்டுமல்ல, என்குடும்பத்தவர்களும் நடந்தவற்றைப் பார்த்தார்கள்.

அச்சந்தியால் சென்றவர்கள் சிவில்உடையில் நின்றவர்களால் தாக்கப்பட்டார்கள், துவக்கு சோங்கினால்அடித்தார்கள், இடித்தார்கள். றைபிள் துவக்கு வைத்திருந்தார்கள். கார்களை மறித்துதாக்கியதைக் கண்டேன். ஒரு காரிலிருந்து சூட்கேசை எடுத்து கானுக்குள் வீசினார்கள். என் உறவினரும் தாக்கப்பட்டனர் கையில் காயம் ஏற்பட்டது. துவக்கினால் அடித்தார்கள்.

உடைகளை உரிந்துவிட்டு நிர்வாணமாக கானுக்குள் விழுத்தினார்கள். அவர்களை அயலவர்களின் வேலிகளை பிடுங்கச் சொல்லி பொலிசார் நிர்ப்பந்தித்தார்கள்.

லொறியில் வந்த சுந்தரலிங்கமும் தாக்கப்பட்டார். லொறியை அடித்தார்கள். இதேபோல பல சம்பவங்களைப் பார்த்தேன். [க]

## "பொலிசா பஸ்ஸில் வந்து கடையை உடைத்தார்கள்'

### நகைக்கடை முதலாளி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

பொலஸார் பஸ்ஸில் வந்து கிருஷ்ணா நகைமாளிகையை உடைத்தார்கள். அவர்கள் யூனிபோம் அணிந்திருந்தார்கள்; நம்பர் இல்லை. எனக்கும் தொழிலாளருக்கும் அடித்தார்கள். நகை செய்யும் கருவிகளையெல்லாம் அடித்து உடைத்தார்கள்.

சன்சோனி விசாரணைக் கமிஷன் முன் சாட்சியமளித்த ஏ. கே. எம். நகைக்கடை முதலாளி திரு. ஏ. கனகசபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஏ. கனகசபாபதி மேலும் கூறியதாவது:-

''கதிரவேலு கடையை உடைத்து உள்ளே சென்றார்கள். எதையும் எடுத்துச் செல்லாமல், நெருப்புவைத்தார்கள். கிருஷ்ணா கடைக்கும் மெத்தையைப் போட்டு எரித்தார்கள். எனக்கும் 30,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

பத்திரிகைப் படப்பிடிப்பாளர் திரு. அ. கதிரவேலு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- "என் கடைக் கதவு முன்பக்கம் திறக்கப்பட்டிருந்தது. நான் ஒரு மணிக்கு வீட்டிலிருந்து கடைக்கு வந்தபோது வழியில் பொலிஸார் சுடுகிறார்கள், ''ஏன் போகிறாய் மகனே'' எனத் தடுத்தனர். நான் திரும்பிப் போய்விட்டேன்.

மறுநாள் போய் கடையைப் பார்த்தபோது பின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. கிருஷ்ணா நகைக் கடையும், ஏ, கே. எம். கடையும் எரிக்கப்பட்டிருந்தது. என் கடையும் எரிக்கப்பட்டிருந்தது. எனக்கு 7500 ரூபா நஷ்டம்.

டயமன்ட் ஹவுஸ் நிர்வாக அதிபர் திரு கனகசுந்தரம் முருகமூர்த்தி கூறியதாவது:- ''1961 ம் ஆண்டு முதல் அங்கு கடை வைத்திருக்கிறேன். அங்கு பல கடைகள் உண்டு. கிருஷ்ணா நகைமாளிகையும். ஏ. கே. நகைமாளிகையும் தெரியும். 17 ந் திகதி கடைகள் எல்லாம் பொலிசாரின் அட்டுழியத்தை எதிர்த்து கடையடைப்புச் செய்யப்பட்டிருந்தது. அன்று நண்பகல் நான் மேல்மாடியில் நின்றேன். அப்போது இ போ. ச. பஸ் ஒன்று வந்து நின்றது. இந்தப் பஸ்ஸில் இருந்து பொலிசார் இறங்கிவந்தனர். ரோட்டில் நின்றவர்கள் ஓடிவிட்டார்கள்.

கிருஷ்ணா மாளிகையை உடைத்து உள்ளே பொலிசார் செல்வதைக் கண்டேன். தளபாடங்களை உடைத்து தீ வைப்பதையும் கண்டேன் பின்னர் ஏ கே நகைக் கடையையும் உடைத்தார்கள். அங்கும் தீ பரவியது.

### அடையாளம் காட்டுவேன்

அப்பொலிசாரில் எனக்கு ஒருவரை நன்கு தெரியும். அவர் முன்பு வீதிப் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றியவர். அவரின் பெயர் குணரத்தின. அவரை அடையாளம் காட்டுவேன் அங்கு நின்றவர்கள் நெருப்பை அணைக்க முயற்சித்த நேரத்தில் பொலிசார் சுட்டுக்கொண்டுவந்தார்கள். எல்லோரும் ஓடினோம்.

கிருஷ்ணா நகைக்கடைக்குப் பின்னால் ஒருவர் சுடுபட்டு விழுந்தார். ஒரு பொலிஸ்காரர் கிருஷ்ணா நகைக் கடைக்கு முன்னால் எதையோ வீசுவதைக் கண்டேன். அப்போது தீஜுவாலைவிட்டு எரிவதைக்கண்டேன் பொலிசார் போய்விட்டனர் நாங்கள் நெருப்பை அணைத்தோம். அரை மணித்தியாலத்தின்பின் இராணுவத்தினர் அங்கு வந்தனர். எங்களுடன் அவர்களும் சேர்ந்து இறந்தவரின் சடலத்தை எடுத்துச் சென்றனர். இராணுவத்தினருடன் தீயணைக்கும் படையும் வந்தது.

''நாங்கள் பொலிஸ்காரர்கள்போலல்ல, எங்களுக்கு வந்து உதவி செய்யுங்கள் என இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். அவர் ஆங்கிலத்தில் கூறினார், எனக்கு ஆங்கிலம் தெரியும்.'' (க)

## "பொலிஸார் என்னைச் சுட்டுவிட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்"

### குமாரகுலசிங்கம் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸார் எனக்குச்சுட்டார்கள். குண்டு இடதுபக்க துடையால் புகுந்து வலது பக்கத் துடையால் வெளியேறியது. பொலிஸார் என்னை ஜீப்பில் தூக்கிச் சென்று ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள்.

சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளித்த நாவாந்துறையைச் சேர்ந்த குமாரகுலசிங்கம் எதிர்வீரசிங்கம் மேற்ண்டவாகூறினார்.

அவர் மேலும் கூறியதாவது நான் ரு ஒ மெக்கானிக் ஆகஸ்ட் 16-ம் தேதி பஸ்ஸில் வேலைக்குவந்தேன். ஓட்டுமடம் சந்திக்கு வந்தபோது நகரத்தில் பொலிஸார் அடிப்பதாகச் சொன்னார்கள். நான்திரும்பிப்போய் விட்டேன். என்தாயாரிடம் எதற்காக வேலைக்குப் போகவில்லை யெனக் கூறினேன்.

என் தம்பி நியூவிக்ரேஸில் வேலைபார்க்கிறார் அவர் அன்று வேலைக்குப் போய் விட்டார். அவரைப்போய்க் கூட்டி வருமாறு எனது தாயார் கூறியதால் யாழ்ப்பாணம் சென்றேன். விக்ரேஸில் போய் விசாரித்தேன். அங்கு தம்பி போய்விட்டதாகக் கூறினார்கள். நான் ஆஸ்பத்திரி வீதிப்பக்கம் போனேன். ஒருகூட்டத்தினர் ஓடிவந்தார்கள். எனக்கு துடையில் வெடிபட்டது.

(4-ம் பக்கம் பார்க்க

# 'சிந்தனைச்சிற்பி' சிற்றரசு காலமானார்

## ஒருவார காலம் தமிழ்நாட்டில் துக்கம்

### "சி. பி. யின் மறைவு பேரிழப்பு" —எம். ஜி. ஆர்.

சென்னை, பெப். 17 தமிழ்நாடு முன்னாள் சட்ட மேலவைத்தலைவரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான 'சிந்தனை சிற்பி' சி. பி சிற்றரசு நேற்று சென்னையில் காலமானார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவராக இருந்த சிற்றரசு, கலைஞர் மு. கருணாநிதி மீது ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தி. மு. க.வில் இருந்து விலகி அ. இ. அ. தி. மு க.வில் சேர்ந்தார்.

சட்ட மேலவைத் தலைவராக இருந்தபோது வெளிநாடுகளுக்குச் சென்று தம் ஆற்றலை வெளிநாட்டவர்க்கு வெளிப்படுத்திப் பாராட்டுப்பெற்ற இவர், பல்துறை நூல்கள் எழுதி லட்சக்கணக்கான அபிமான வாசகர்களைப் பெற்றவர்.

இவரது மறைவு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் விடுத்துள்ள இரங்கற் செய்தியில், "அறிஞர் அண்ணா, ஈ. வெ. ரா. ஆகியோரின் சுயமரியாதை இயக்க கோட்பாடுகள் நிறைவேறுவதற்கு உறுதுணையாக நின்ற ஒருவரை தமிழ்நாடு இழந்துவிட்டது அ. இ. அ. தி. மு. க வுக்கு இவரது மறைவு பேரிழப்பாகும் என்று கூறியுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் ஒரு வாரகாலம் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்றும் முதலமைச்சர் திரு எம் ஜி ஆர் அறிவித்தார். [உ]

# சாம்பியன் பட்டம் இழந்தார் முகமதலி

லண்டன், பெப். 17 உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரர் பட்டத்தை முகமது அலி (கஸிஸஸ்கிளே) நேற்று லாஸ்வேகஸில் (நெவேடா) நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் இழந்தார்.

முகமதுஅலி லியோன்ஸ் பிங்ஸ் என்ற 24 வயது அமெரிக்க வீரரிடமே தோற்றார்.

லாஸ் வேகஸில் நடைபெற்ற 15வதுசுற்றில், குத்துச்சண்டை போட்டியில் முகமது அலிக்கு இத்தோல்வி கிடைத்தது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த மூவரில் இருவர் லியோன் ஸ்பிங்ஸ் வெற்றி பெற்றதாக அறிவித்தனர். ஒருவர் முகமதுஅலி வென்றதாக அறிவித்தார்.

36 வயதான முகமதுஅலி 57 குத்துச்சண்டைகளில் போட்டியிட்டு இரு போட்டிகளில் மட்டுமே தோல்வியைத் தழுவினார். [உ]

# என்னையும் எனது குடும்பத்தையும் ஒழிக்க ஜனதா அரசு திட்டம்

## இந்திரா குற்றச்சாட்டு

அமராவதி, பெப் 17 'என்னையும் எனது குடும்பத்தையும் ஒழிக்க ஜனதா அரசு திட்டமிட்டு செயலாற்றி வருகிறது' இவ்வாறு முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அமராவதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குற்றம்சாட்டினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நெருக்கடி நிலையினால் நாட்டில் உறுதிப்பாடு ஏற்பட்டது. ஜனதா அரசு இதைவிட்டுவிட்டு என்னை மாசுபடுத்துவதற்காக நெருக்கடி காலத்தின் இருளடைந்த பகுதியை மட்டும் மிகைப்படுத்தி வருகிறது. (இ)

## கோகலே காலமானார்

புதுடில்லி, பெப். 17 இந்திய முன்னாள் சட்ட அமைச்சர் திரு எச் ஆர் கோகலே நேற்று 63 வயதில் மாரடைப்பால் காலமானார். [இ]

......

## யாருடையது?

கன்னாதிட்டி சந்தியில் கிடந்து மூன்று கூப்பன் அடிக்கட்டைகளுடன் பங்கிட்டு அட்டையொன்றை மண்டைதீவைச் சேர்ந்த சோதிட ஆசிரியர் மா. ராஜேந்திரன் என்பவர் எடுத்து வந்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.


இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் ஷவரங்கள் எடுப்பதற்கு

கிளஸிக் பிளேட்

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்: உறவுஸ் அன்ட் புரொபர்ட்டி ட்ரேட்ஸ் லிமிடெட்


சன்சோனி கமிஷன்:

# 'தீயை அணைக்கச் சென்ற இளைஞர்களை பொலிசார் தடுத்தனர்'

(யாழ்ப்பாணம்)

"வீதியில் எரிந்து கொண்டிருந்த டயர்களை பொலிசார், நவீனமார்க்கட்டிலுள்ள எனது கடையில் போட்டார்கள். தீயை அணைக்க தண்ணீருடன் போன இளைஞர்களை பொலிசார் தடுத்தார்கள்."

யாழ் நவீன மார்க்கட் கௌரி போறேஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. நல்லதம்பி செல்லையா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறுகூறினார்.

திரு. செல்லையா மேலும் கூறியதாவது: ஆஸ்பத்திரிவீதி-கஸ்தூரியார் வீதி சந்தியில், நவீனமார்க்கட்டில் என்கடை முதல் கடையாக இருக்கிறது. அங்கு. கோழித்தீன், மாட்டுத்தீன் விற்பனைசெய்வதுண்டு. பாங்ஷால்வீதியிலும் எனக்கு கமலா ஸ்ரோர்ஸ் என்றகடை உண்டு.

பழைய மார்க்கட் கடைகள் எரிக்கப்பட்டுவிட்டதாக கேள்விப்பட்டு, மற்ற வியாபாரிகளுடன் தொடர்பு கொண்டு அது உண்மையென அறிந்தேன்.

காலை 9-30 மணிக்கு வந்தேன். கடைகள் பூட்டப்பட்டிருந்தன. சுபாஸ்கபே பக்கம் சென்றேன் அங்கு பொலிஸார் அணிவகுத்து நின்றுகொண்டிருந்தனர். எனது கடைக்கு பொலிஸார் எரிந்த டயரை எடுத்துப்போட்டனர். இளைஞர் அணைக்க 'தண்ணீர் கொண்டுபோக அதனைத்தடுத்தனர் அவர்களை கலைத்தனர் பொலிஸார் துப்பாக்கிவைத்திருந்தனர்.

எனக்கு எனது கடைக்கு கிட்டபோகமுடியாமல் இருந்தது. 2 மணிக்கு ஆணையாளருக்கு போன் பண்ணினேன் மறுநாள் கடையில் நடந்த சேதங்களை படம் எடுத்தேன் எனக்கு 42,000 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஏ எஸ் பி ஜெயசூரியாவிற்கு வாக்கு மூலம் அளித்தேன். பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் திரு அ அமிர்தலிங்கத்திற்கும்புகார் செய்தேன். (ச)

## என்னைச்சுட்டுவிட்டு

[3 ம் பக்கத் தொடர்ச்சி]

நான் விழுந்து விட்டேன் இளைஞர்கள் என்னைத் தூக்கிச் சென்றார்கள் பொலிஸாரை கண்டதும், ராஜா கிறீம் கவுஸ் அருகே என்னை போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். பொலிஸார் துரத்தி வந்தார்கள் என்னை கையில் பிடித்துதூக்கி ஜீப்பில் ஏற்றினார்கள் ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். 5 மாதங்கள் சிகிச்சை பெற்றேன் எனக்கு அடுத்த கட்டிலில் வரதராசா சிகிச்சை பெற்றார். அவருக்கு கால் அகற்றப்பட்டது இப்ப வேலையிழந்துவிட்டேன் வேலை இனிமேல் செய்யமுடியாது நஷ்டஈடுதருமாறு கேட்கிறேன் எனக்கு மாதம் 200 ரூபா சம்பளம் கிடைத்தது இனிமேல் வாழ்நாள் முழுவதும் வேலை செய்யமுடியாது ஆதலால் அரைலட்சம் ரூபா நஷ்டஈடு தர வேண்டும். [ச]

## குற்றத்தை ஏற்றார்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பில் வீடு ஒன்றுக்குள் புகுந்து திருட முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட இளைஞர் ஒருவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அடுத்த மாதம் 1 ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டார்.

கடந்த 5 ம் திகதி பண்டத்தரிப்பில் திருட முயன்றதாகக் கொழும்புத்துறையைச் சேர்ந்த முத்துக்கறுப்பன் தர்மன் என்ற 26 வயது இளைஞர்மீது குற்றம் சாட்டப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இளைஞன் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவரின் கைரேகையைப் பதிவு செய்யும்படியும் மல்லாகம் நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினம் உத்தரவிட்டார். (இ)

வெஸ்லி
(மாணிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவாஜி — பத்மபிரியா
வைரநெஞ்சம்

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி: 6-45, 10-00
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
சாரதா

From; 18-2-78
Regal Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
Crazy Girls and the Funny Boy

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன், ஜெயலலிதா, நாகேஸ
அனுதை ஆனந்தன் (கலர்— புதியபிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 23-2-78 வரை நீடிக்கப்பட்டுள்ளது
இன்ஸ்பெக்டர் மனைவி
24-2-78 முதல் ஜெமினி, பத்மினி, ராதா நடித்த சித்தி

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பாலசந்தரின்
எதிரொலி சிவாஜி, கே.ஆர்.விஜயா நாகேஷ்
(புத்தம் புதிய பிரதி)
சிறுவர்களுக்கான ஆங்கிலப்படம்!
சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்
"Kingdom in the Clouds"
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு! நேரில் தொடர்புகொள்ளவும்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ◦ ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார் நடித்த
மேயர் மீனாட்சி

50-வது வெற்றி நாளை நோக்கி
ராணி வி. பி. கணேஷன் — சுபாஷினி ராம்தாஸ் — ஜெனீட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெலிங்டன் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
கணவன்

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ போன் 7693
(யாழ்.நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்


### சன்சோனி கமிஷன் முன் வெளியான தகவல்கள்

# ரயிலை மறித்து 3000 பேர் தண்டவாளத்தில் படுத்தனர்

**—ரயில் கட்டுப்பாட்டாளர்**

அனுராதபுரம் புகையிரத பகுதி கட்டுப்பாட்டதிகாரி பெரியதம்பி செல்லத்துரை கூறியதாவது: நான் தற்சமயம் அல்வாயிலிருக்கின்றேன் 37 வருடங்கள் கடமையாற்றியிருக்கிறேன்.

ஆகஸ்ட் 16ம்தேதி அனுராதபுரம் கட்டுப்பாட்டு நிலையத்தில் கடமையாற்றினேன் நள்ளிரவு ரயில் நிலையத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பிரயாணிகள் தாக்கப்படுவதாக எனக்கு தகவல் கிடைத்தது கட்டுப்பாட்டதிகாரி என்னை உடனடியாக கட்டுப்பாட்டு கந்தோருக்குவருமாறு கூறினார் கட்டுப்பாட்டு நிலயத்திற்கு வந்தேன் அங்கு இருக்கும் போது, புகையிரத நிலையப் பகுதியில் சத்தம்கேட்டது பிரயாணிகள் 'ஐயோ அம்மா' என்று கத்திக்கொண்டுஒடினார்கள் நான் ரயில் நிலையத்திற்கு போன் பண்ணி அங்கு நடப்பதென்னவென்று அங்கு கடமையாற்றிய திரு போலியாரைக் கேட்டேன்

**3000 பேர் ரயிலைத் தடுத்தனர்**

பிரயாணிகள் கடுமையாகத் தாக்கப்படுவதாக அவர் கூறினர்

மெயில் ரயில், ஸ்ரேசன் பகுதிக்குவரவில்லை ஆதலால் ரயில் ரயில் நிலையத்திற்கு கொண்டு வருமாறு கூறினேன்

3000 பேர்கள் ரயிலை போக விடாமல், தண்டவாளத்தில் படுத்துக்கொண்டு தடுப்பதாக அவர் கூறினர் எப்படியும், ரயிலை புகையிரத நிலைய பகுதிக்கு எடுக்குமாறு கூறினேன்

**உத்தரதேவியை நிறுத்தினேன்**

பின் கொழும்பு தலைமைப் பீடத்திற்கு போன்பண்ணினேன்

16ம் தேதி நள்ளிரவு அனுராதபுரத்தில்நடந்த தாக்குதல் பற்றி உடனடியாக கொழும்பு கட்டுப்பாட்டதிகாரிக்கு போனில் அறிவித்தேன் அப்படியிருந்தும் 17ம் திகதி காலை கொழும்பிலிருந்து யாழ்தேவி புறப்பட்டுவந்தது ஆனல் காங்கேசன்துறையிலிருந்துவரும் உத்தரதேவியை சேவைக்கு விடாமல் தடுத்துவிட்டேன்

நான் அனுராதபுரம் அரசாங்க அதிபருக்கும் அறிவித்தேன் மாவட்ட சுப்பிரிண்டன்ட் கே. குணசேகராவுக்கும் அறிவித்தேன். உதவி சுப்பிரிண்டன் பீரீஸ்உம் அங்கு வந்தார்.

மறுநாள் காலை நாங்கள் கொழும்புடன் தொடர்பு கொண்டோம். யாழ்தேவி கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்டுவிட்டதாக கூறினார்கள். எப்படியும், யாழ்தேவியை எந்த ரயில் நிலயத்திலும் உடனடியாக திருப்பி கொழும்புசெல்ல ஏற்பாடு செய்யுமாறும் அச்சேவையை ரத்துச் செய்யுமாறும் கூறினேன். யாழ்தேவி அந்நிலையில் செல்லமுடியாதென்றும் கூறினேன். உத்தரதேவிசேவை அன்று ரத்துச்செய்யப்பட்டு விட்டது.

17ம் திகதி காலை 9-30 மணிக்கு சிங்கள குண்டர்கள் அனுராதபுரம் ரயில் நிலையத்திற்கு அணிவகுத்து வந்தார்கள். என் கட்டுப்பாட்டு நிலயத்தில் இருந்து அதனைப் பார்க்க முடியும்.

"நான் அனுராதபுரத்தில் நடப்பதை உடனுக்குடன் கொழும்பு. கட்டுப்பாடு நிலயத்திற்கு றேடியோ வயர்லஸ் மூலம் அறிவித்துக் கொண்டிருந்தேன்.

**வானைநோக்கி புகை**

அப்போது ரயில்நிலைய பக்கத்தில், வானத்தைநோக்கி புகைமண்டலம் கிளம்பியது. ரயில் நிலைய அதிபர் திரு. தம்பிராசாவின்காரை தீயிட்டு கொழுத்திவிட்டார்கள் என்று அறிந்தேன். சிங்களக் குண்டர்கள், கட்டுப்பாட்டு நிலயத்தை நோக்கி வந்தனர்;

## "யார் அந்த செல்லத்துரை? அவனைவெளியில்வரச்சொல்'

### இப்படி கத்தினராம் குண்டர்கள்

யார் அந்த செல்லத்துரை? அவனை வெளியே வரச்சொல் என்று கத்தினர்கள். அப்போது உதவியாளர் திரு. பீரிஸ் கீழே போனார். நான் பதட்ட நிலையில் பயந்திருந்தேன்.

கீழே வேலைசெய்த சிங்கள உத்தியோகத்தர்கள் எனக்கு பாதுகாப்பு அளிக்க முன்வந்தார்கள், மாவட்ட சுப்பிரிண்டன் அந்தோர், மலகூடத்திற்குள் என்னைவிட்டுப் பூட்டி தாங்கள் வரும்வரை திறக்க வேண்டாம் என்று கூறினார்கள். மற்ற தமிழ்உத்தியோகத்தர்களுக்கும் பாதுகாப்பளித்தார்கள். கூட்டத்தினர் போனபின்பு நான் மலகூடத்தைத் திறந்து வெளியில் வந்தேன்.

**கூட்டத்தினரை விடவேண்டாம்**

காலை 10 மணிக்கு பொலிஸ் அதிபர் லியனகே அங்கு வந்தார். நாங்கள் நடந்தவற்றை அவருக்கு சொன்னோம்.

ரயில்நிலைய ஓய்வு அறைக்கு பிற்பகல் 4 மணிக்குப் போனோம். அங்கு 2 பொலிசார் காவல் நின்றார்கள். அப்போது ஒரு கூட்டத்தினர்ரயில் நிலயத்திற்கு வந்தனர். அவர்களை மேலே விடவேண்டாம் என்று அங்கு காவல் செய்த பொலிசாரிடம் கூறினேன். நான் முதல் அறையில் இருந்தேன். அவர்களுக்கு நான்ஆங்கிலத்தில் கூறியது விளங்கவில்லை. பின் சிங்களத்தில் கூறினேன். மார்க்கட்டில் உள்ள கூட்டத்தினர், ரயில் நிலயத்தை நோக்கி, தமிழ்உத்தியோகத்தரை தாக்கவரப் போகிறார்கள் என்று கூறி ஏதாவது தேவையென்றால் கேட்கும்படியும் சொன்னார்கள். நாங்கள் இரவு சாப்பாட்டை முடித்துவிட்டுஅறையில் இருந்தோம்.

மாவட்ட சுப்பிரிண்டனிடம் பொலிசார் சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை, வேறு வழி செய்யுமாறு கேட்டேன். ஆனல் எதுவும் நடக்கவில்லை.

**வந்துபோன ரயில் ஊழியர்**

நாங்கள் அங்கிருக்கும்போது ஒரு புகையிரத ஊழியர் அடிக்கடி வந்து லைட்டைப்போடுவதும், அணைப்பதுமாக நின்றார் சிறிதுநேரத்தில் லைட் அணைந்து விட்டது.

அப்போது ஒரு கூட்டத்தினர் உள்ளே வந்தனர். என் மண்டையில் ஒருவர் பலமாக அடித்தார். அவரை நான் அடையாளம் காண முடியும் ஆனல் பெயர் தெரியாது.

ரயில்வே ஊழியர் கங்காணிகளுஅப்புவும் அக்கூட்டத்துடன் வந்திருந்தார். என்னிடம் பணம் தரும்படி கேட்டார். நான் என்னிடமிருந்த 11ருபாவைக் கொடுத்தேன். மற்ற தமிழ் உத்தியோகத்தர்களும் கொடுத்தார்கள். எங்கள் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டது. பின் மற்ருெரு கூட்டத்தினர் வந்து தாக்கினர்.

நான் மயக்கம்மடைந்து விட்டேன். செப்டம்பர் 9 ம் தேதி நான் கொழும்பு ஆஸ்பத்திரியில் மயக்கம் தெளிந்தது டாக்டர் காப்பிரல் சத்திர சிகிச்சை செய்தார்.

**'ஞாபகசக்தியை இழந்துவிட்டேன்'**

ஞாபகசக்தியை இழந்துவிட்டேன். கையின் பலம் இழந்து விட்டது எனக்கு 50,000 ரூபா நஷ்ட ஈடு கோருகின்றேன்."

**ஒரு லிகிதரின் 'கதை'**

கொழும்புத்துறைமுகக் கூட்டுத்தாபன கிளாக் முத்து மாணிக்கம் தயாபரசிங்கம் கூறியதாவது "20 ம் தேதி என்னை அங்கு வேலை செய்யும் ஆட்கள் தாக்கினர்கள். சேட்டை கிழித்தார்கள். எனதுஉடைமைகளை கொள்ளையடித்து விட்டார்கள். நான் முகத்துவாரத்தில் அறையொன்றில் வாடகைக்கு இருந்தேன். பின் அகதிகள் முகாமிற்குச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தேன். எனக்கு திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்று தரவேண்டும் சம்பளம் தர வேண்டும்." [க]

## இறுதி ஆட்டம் இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ், உதைபந்தாட்ட லீகின் ஆதரவில் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி மோதல் இன்று மாலை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகமும் மோதும்.

பேட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண எம் பி. திரு. வெ. யோகேஸ்வரன் கலந்துகொள்வார். வெற்றி பெற்ற கழகத்திற்கான பரிசை திருமதி யோகேஸ்வரன் வழங்குவார். [கெ-உ]


RIO Jaffna
Daily 4 Shows
Fury of the Phospherous

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45,
சனி, ஞாயிறு 2-30
பேசும்தெய்வம்

## சன்சோனி கமிஷன்: நேற்றைய விசாரணை

### தனிநாடு வேண்டுமா? தமிழ்நாடு வேண்டுமா?

# கேட்டு கேட்டு குண்டர்கள் வீட்டில் புகுந்து தாக்கினர்

[யாழ்ப்பாணம்]

ருகமவில் உள்ள எனது சொந்தவீட்டில் நான் இருந்தபோது எனது வீட்டை உடைத்துக் கொண்டு உட்புகுந்த சிலர் உங்களுக்குத் தமிழ்நாடு வேண்டுமா? தனிநாடு வேண்டுமா?'' என்று கேட்டுக் கேட்டு இரும்புக்கம்பியால் அடித்தார்கள்.

இவ்வாறு கொழும்பு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் எழுதுவினைஞராகப் பணிபுரிந்த திரு. சோமசுந்தரம் ராஜேந்திரன் நேற்றைய சன்சோனிக்கமிஷன் விசாரணையின்போது கூறினார்.

திரு. சோமசுந்தரம் ராஜேந்திரன் மேலும் கூறியதாவது:

நான் கலவரத்தின்போது கொழும்பு சி. டபிள்யு. ஈ.யில் கிளாக்காக கடமையாற்றினேன். 14 வருடம் சேவையாற்றியுள்ளேன். ருகமவில் சொந்த வீடு இருக்கிறது. வீட்டின் பெறுமதி 25,000 ரூபா. 10,000 ரூபா வங்கியில் கடன் பெற்று கட்டினேன்.

### 50 ரூபா கேட்டனர்

ஆகஸ்ட் 20ம் திகதி இரவு என் வீடு தாக்கப்பட்டது. அன்று மாலை 6 மணிக்கு, 15 பேர் வீட்டுக்கு வந்தார்கள் 50 ரூபா தருமாறு கேட்டார்கள், காசு தராவிட்டால் தாக்கப்போவதாகக் கூறினார்கள். என் மனைவி காசு இல்லை எனக் கூறி 10 ரூபா கொடுத்தார் அப்போது எல்லப்ப என்பவர் மேசையிலிருந்த பெட்ரோமாக்ஸையும் எடுத்துச் சென்றார். தாங்கள் இனி வரமாட்டோம் எனக் கூறிச் சென்றனர்.

### தமிழரின் வீட்டை உடைக்கவேண்டும்

இரவு 11 மணிக்கு அவர்கள் மீண்டும் வந்தனர்.

தமிழரின் வீட்டை உடைக்க வேண்டும் என பலமாக சத்தமிட்டுக்கொண்டு வந்தார்கள் கதவைதிறவடா என்று கத்தினார்கள், நான் திறக்கவில்லை, அவர்கள் உடைத்துக்கொண்டு வந்தார்கள்,

என் இளைய மகளுக்கு இரும்புக்கம்பியால்சத்தம்போடாதே என அடித்தார்கள். அப்போது அங்கு எரிந்துகொண்டிருந்த லாம்பு அணைந்துவிட்டது.

கமிஷனர்: மின்சாரம் இல்லையா?- இல்லை. மனைவியும் பிள்ளைகளும் பின்பக்கத்தால் கறுவாக்காட்டுக்குள் ஓடிவிட்டார்கள்.

எல்லப்ப என் சேட்டில் பிடித்து, இரும்புக்கம்பியால் அடித்தார் இன்னும் ஒருவரும் அடித்தார்.

உங்களுக்கு தமிழ்நாடு வேண்டுமா? தனிநாடு வேண்டுமா? என்று கேட்டு அடித்தார்கள்.

### "உங்களைக் கொல்லவேண்டும்"

யாழ்ப்பாணத்தில் சிங்களவர்கள் தாக்கப்படுவதாகவும், உங்களை உயிருடன் விடக்கூடாது என்றும் உங்களைக் கொல்லவேண்டும் என்றும் கூறினார்கள்.

6 பேரின் பெயர் எனக்குத் தெரியும். பொலிஸ் வாக்கு மூலத்தில் கொடுத்திருக்கிறேன். கந்தானை பொலிசில் புகார்செய்தேன்.

இரும்பு கம்பியால் அடித்து எனக்கு தலையில் 8காயம் ஏற்பட்டது. நான் ஒருவீட்டில் தங்கியிருந்தபோது பொலிஸார் என் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தார்கள். என் கை முறிந்துவிட்டது. கையால் வேலைசெய்யமுடியாது. அன்று அரைமைல் தூரத்தில் ஜோசப் சில்வா என்பவர் வீட்டில் தங்கினேன் அங்கு நான் மயக்கமடைந்து விழுந்தவிட்டேன். பின் மயக்கம் தெளிந்து எழும்பும்போது என் மகன் ஒருவர் வந்து எனக்கு உதவி செய்தார்.

என் மனைவி பிள்ளைகளை, கறுவாக்காட்டுக்குள் தேடினோம். பின் ஒருவீட்டில் கேட்டோம் அவர்கள் இப்போ தான் போவதாக சொன்னார்கள் பின் கண்விழித்துட்டோம்.

ஆஸ்பத்திரியில் இருக்க முடியாததினால் மறுநாள் துண்டுவெட்டி புறப்பட்டேன் அங்குள்ள சிற்றூழியரும் சிங்கள நோயாளிகளும் இவர்களுக்கு 'அடித்தது காணாது என்று சொன்னார்கள். ஆஸ்பத்திரியில் பதட்டநிலை இருந்தது.

என் வீட்டில் இப்போ பெர்னண்டோ என்பவர் குடியேறிவிட்டார். அவருக்குத்தான் என் யாழ்ப்பாண விலாசம் தெரியும்.

### கொழும்பு வரக்கூடாது என கடிதங்கள்

கொழும்புக்கு வரக்கூடாது என எச்சரிக்கை கடிதங்கள் தினமும் வந்து கொண்டிருக்கிறது. என வீட்டை விற்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு வீடமைப்பு இலாகாவிற்கு எழுதியுள்ளேன் [ச-இ]

# மகான் காசிவாசி செந்திநாதையர்

- திருமதி யோகேஸ் கணேசலிங்கம் -

[யாழ். வளாகம்]

நாவலரின் நன்மாணாக்கரும், அவரால் நன்னடக்கைப் பத்திரம் பெற்றவரும் அவர் வழியிலே வந்தவருமாகிய மகான் காசிவாசி செந்திநாதையர் 1848ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள குப்பிழானில் பிறந்தவர். தனது இளமைக் காலத்திலே, கிறிஸ்தவமதத்திலர் தமது மதத்தைப் பரப்பக் கையாண்ட வழிவகைளைக் கண்டு, சைவம் தழைக்கப் பாடுபட்ட ஐயரவர்களை நாவலருடன் பல வழிகளிலும் ஒப்பிட முடிகின்றது.

ஆரம்பகல்வியைப் புன்னாலைக்கட்டுவனிலும் பின்னர் ஆங்கிலம் கற்கும் விருப்பினால் யாழ்.மத்திய கல்லூரி என்று அழைக்கப்படும் வெஸ்லியன் மிஷனரிமாரால் நடாத்தப்பட்ட கல்லூரியிலும் சேர்ந்து படித்தார் இக்காலத்திலே சைவம் வளர்க்கும் நோக்கத்தோடு நாவலர் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலையிலே ஆறுவருடங்கள் தொடர்ந்து ஆசிரியராக இருந்தார். வெள்ளிக்கிழமை தோறும் வண்ணைச்சிவன் கோவிலிலே நாவலர் ஆற்றிய பிரசங்கங்களைக் கேட்கும் வாய்ப்பினைப் பெற்ற ஐயரவர்களுக்குச் சைவத் தொண்டுக்கான வித்து இக்காலத்திலே இடம்பட்டதெனக் கூறலாம்.

தன் கல்வியைத் தொடர்வதற்காகத் தென் இந்தியா சென்று திருவனந்தபுரத்திலே சமஸ்கிருதம், காவியம், தர்க்கம் ஆகியவற்றைக் கற்று ஈழம் திரும்பிய ஐயரவர்கள் கோவில்களிலே சைவப் பிரசங்கங்கள் ஆற்றத் தொடங்கினார். புகழ் பெற்ற இவரது பிரசங்கங்களுக்கு ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் புகழ் கிடைத்தது. அக்காலத்திலே ஆட்சியாளர்களாக விளங்கிய கிறிஸ்தவர்களின் சூழ்ச்சியைக் கண்டு பொறுக்கமாட்டாமல் 'சிவனுந்தேவனு என்னும் தீய நாவுக்கு ஆப்பு' முதலிய நூற்றுக்கணக்கான கண்டனங்கள் எழுதி வெளியிட்டார்.

பத்துவருடங்கள் தொடர்ச்சியாகக் காசிவாசியாய்ச் சமஸ்கிருத பண்டிதர்களின் மத்தியில் இருந்து பிரம்ப சூத்திரத்தை ஆராய்ந்தார். தனது வடமொழி அறிவின் துணை கொண்டு நீலகண்ட பாஷ்யம், சிவஞானபோத வசனாலங்காரதீபம், சைவ வேதாந்தம் என்னும் நூல்களை எழுதினார். பல வருடங்களைக் காசியிற் கழித்தமையால் இவரைக் காசி வாசி என்று அழைத்தனர்.

மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் நோக்கத்தோடு ஓர் பள்ளிக் கூடத்தை நிறுவியும், நூல்களை வெளியிடும் நோக்கத்தோடு அச்சுக் கூடத்தைத் தொடங்கியும் பல தொண்டுகள் செய்தார். இவர் நூல்கள் ஆழ்ந்த சைவ சமயக் கருத்துக்களைக் கொண்டனவாக, அவர் வடமொழியறிவைப் பறைசாற்றுகின்றன.

அன்னாரது வாழ்வு, பணி ஆகியன பற்றிய நூல் ஒன்று அவரது பிறந்த ஊராகிய குப்பிழானிலுள்ள விக்னேஸ்வர வித்தியாசாலையில் இன்று வெளியிடப்படுகின்றது. அன்னாரது உருவப்படமும் இவ் வித்தியாசாலையில் இன்று திறந்துவைக்கப்படுகிறது. [அ]

# இன்று தம்பர்நினைவு தினம்

தம்பர் என்றால் 'எந்தத் தம்பர்' என்று யாரும் கேட்பதுண்டா? பதிலாக கலைப்புலவர் நவரத்தினம், ஹண்டி பேரின்பநாயகம் போன்றோர் நினைவுக்கு வருவர்.

கலைப்புலவர், தம்பர் மாஸ்டர், ஹண்டி மாஸ்டர் என்றால் யாருக்குத் தெரியாது?

கல்வியாலும், அறிவாலும், பண்பாலும், தெளிந்த சிந்தனையிலும் இவர்கள் சுடர்விட்டுப் பிரகாசித்தனர்.

நமது அதிர்ஷ்டக் குறைவினால் கல்விமான்களை ஒவ்வொருவராக இழந்துவருகின்றோம்.

யாழ்ப்பாணம் மத்தியக் கல்லூரியில் மாணவனாகக் கல்வி கற்ற தம்பர் பின்னர் பல்கலைக்கழகத்தில் பயின்று விஞ்ஞானப் பட்டதாரியாகி தாம் படித்த யாழ். மத்திய கல்லூரியிலேயே ஆசிரியராக நியமனம் பெற்றதுடன் அதிபராகவும் பல காலம் பணியாற்றினார். அவரிடம் கல்வி பெற்ற எல்லாருமே இன்று நன்னிலையில் உள்ளனர். காரணம் அவரது கற்பித்தல் திறமையே.

யோகசுவாமிகளுடன் அவர் கொண்டிருந்த உறவினைக் கொண்டு அவரது ஒழுக்க சீலத்தை உணரலாம்.

அவர் எப்பொழுதும்தேசிய உடையே அணிவர். இதனால் அன்னாரது தேசியப்பற்றையும், கலாச்சாரப்பற்றையும் உணரலாம்.

கல்விமான் தம்பர் ஒரு சிறந்த கூட்டுறவாளராகவும் திகழ்ந்தார். வாழ்வின் பெரும் பகுதியையும் கூட்டுறவு இயக்கத்திற்காக செலவழித்தார்.

பல துறைகளிலும் அவர் ஓர்ஆலோசகராக விளங்கினார் எப்போது பார்த்தாலும் பின்னேரத்திலிருந்து இரவு வரை அவர் வீட்டில் ஆட்கள் வந்துபோய்க்கொண்டேயிருப்பர். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பிரச்னைகள் பற்றித் தம்பருடன் ஆலோசனை கலக்கவேவந்து போவர்.

தனித்துவமான சிரிப்புக் கொடையைக் கொண்ட தம்பர் கோபித்து அறியாதவர்.

பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா தம்பரது நண்பர். தென்னிலங்கை மக்களும் அவர் மீது மதிப்பு வைத்திருந்தனர் எமது நாட்டில் நிலவும் இனப்பிரச்னை போன்றவற்றில் சமாதானம் காண்பதற்குத் தம்பர் போன்றவர்கள் தேவை.

இன்று தம்பரின் ஏழாவது சிராத்த தினத்தில் அவரை நினைவு கூர்வோம்.

— எம். நடராஜா

## "உடன் தொடர்பு கொள்க"

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சன்சோனிக் கமிஷன் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்க விரும்பும் பாதிக்கப்பட்ட அரசாங்க, கூட்டுத்தாபன தமிழ் ஊழியர்கள் உடனடியாக பொதுச் செயலாளர், தமிழ் தொழிற்சங்க கூட்டணி கிளை அலுவலகம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## ஒரு பெண்ணின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கணவன் கொல்லப்பட்ட சமயம் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அவர் உயிருடன் இருந்திருந்தாலேனும் 13 வருடம் கடமையாற்றியிருப்பார். ஆதலால் எனக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வேண்டும்.

### கண்ணீர் விட்டார்

இந்நேரம், திருமதி சிவசம்பு அழத்தொடங்கிவிட்டார். லேஞ்சியால், கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீர்த் துளிகளை துடைத்துக்கொண்டு சாட்சியமளித்தார். வார்த்தைகள் வரமுடியாமல் தொண்டையடைத்துவிட்டது நா வரண்டுவிட்டது கண்கள் கலங்கியிருந்தன.

### நான் அனாதை

என் கணவர் 23 வருடம் கடமை புரிந்தார். எனக்கு நஷ்டஈடு கோரி எத்தனையோ கடிதம் எழுதினேன். பதில் இல்லை. நான் இப்போது அனாதை. ஆதரிக்க யாருமில்லை, என் கணவவின் மரணவீட்டிற்கு அவருடன் வேலைசெய்த 15 நண்பர்கள் வந்தார்கள். அவர்கள்கொலைச் சம்பவத்தை கண்ணால் கண்டதாகக் கூறினார்கள். சாட்சியமளிக்க தயாராக இருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள். (௪)

## யாழ்ப்பாணம்..,

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதிபர் கூறினார்.

### யாழ் நகரமே அழிந்துவிட்டது என்றார் எஸ். பி.

யாழ்ப்பாணத்தில் என்ன கலவரம் என்று கேட்டபோது யாழ்ப்பாண நகரமே இல்லாமல் போய்விட்டது எனக் கூறினார். அப்போது சிவபாதசுந்தரமும் நின்றார். எனது கார் எரிக்கப்பட்டுவிட்டதாக அறிந்தேன். காரின் பெறுமதி இருபதினாயிரம் ரூபா. கார் ரொக்கப்பணம் எல்லாமாக உதிரிப்பாகங்கள் 25,000 ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

நான் அங்கு 3 வருடம் 4மாதம் கடமையாற்றினேன் சில பொலிஸாரின் நடவடிக்கைகளை நேரில் பார்த்தேன் அதனால் அவர்கள் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பு அளிக்கமாட்டார்கள் என அறிந்து கொண்டேன்.

நான் அனுராதபுரம் மணிக்கூட்டடியில் நின்று பொலிஸாரின் நடவடிக்கைகளை நேரில் பார்த்தேன். இதற்கு பொலிஸார் பின்னணியிருந்ததென அறிந்து கொண்டேன். (௪)

## மரண அறிவித்தல்

சீனித்தம்பி மத்தியூஸ் தங்கராசா

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் கடமை புரியும் சீனித்தம்பி, மாக்கிறற் தம்பதிகளின் மைந்தன் மத்தியூஸ் தங்கராசா அகால மரணமானார். இவர் ஜெகிந்தா, செல்வமணியின் சகோதரரும், ஜெயானந்தத்தின் மைத்துனரும், திருமதி குமாரசாமி (யாழ். வைத்தியசாலை) யின் பெருமகனும், குயின்சன், குகன், குலதீஸ், குலகரன், ஜீவலோஜினி, ஜீவானந்தன் ஆகியோரின் மாமனுருமாவர். அன்னாரது நல்லடக்கம் இன்று (18-02-78) சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

8551 த. டோமினிக்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரீவல்லிபுர மேல வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
The Eelanaadu Post Box No. 49, Jaffna Telegram du. Telephone 389. Registered as a Newspaper in Srilanka